DEPOSITION OF WITNESS
---
IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C. “ | : | 188/2022 |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 7 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சபாரத்தினம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.08.2024

**முதல் விசாரனை:**

நான் காரைக்குடியில் எண்.26 ல் மீனாட்சி இல்லம் டி.டி நகர் முதல் வீதி என்ற முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் சாட்சிகள் இராமநாதன் எனது அண்ணன் ஆவார். பூங்கோதை எனது அண்ணி ஆவார். ஆஜர் எதிரிகளான ராஜா என்ற ராஜசேகர், லதா ஆகியோர்களை தெரியும். கடந்த 13.03.2016 தேதி நான் எனது மனைவியும் மற்றும் எனது அண்ணி பூங்கோதை ஆகியோர் சாமி தரிசனம் செய்வதற்க்காக பழனி கோவிலுக்கு சென்றிருந்தோம். அன்று மதியம் 1.50 மணியளில் காரைக்குடியில் இருந்து சிங்கப்பூர் காம்ளக்ஸில் உள்ள கணேசன் என்பவர் எனது அண்ணிக்கு போன் மூலம் என் அண்ணனை முன் விரோதம் காரணமாகவும், சொத்து பிரச்சனை காரணமாகவும், போலீஸில் புகார் கொடுத்ததன் காரணமாகவும் எனது அண்ணனை இராஜசேகர் என்பவர் வெட்டிவிட்டதாகவும் எனது அண்ணனின் அலரல் சத்தம் கேட்டு கணேசன் என்வரும் , பூச்செடி ஆறுமுகம் என்பவரும் வந்தபோது எதிரி இராஜசேகர் என்பவர் என்றைக்கும் இருந்தாலும் என்கையில் தான் உனக்கு சாவு என்று சொல்லிவிட்டு சென்றதாகவும், அதன் பிறகு எனது அண்ணனை அரசு மருத்துவமனைக்கு கணேசனும்,

ஆறுமுகம் என்பவரும் ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்ததாகவும், அங்கு முதல் உதவி செய்துவிட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னதாகவும், பிறகு மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையான மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு சிகிச்கைக்கு கொண்டு சென்று சேர்த்துள்ளதாகவும் எனது அண்ணி என்னிடம் கூறினார். அதன் பிறகு நான் எனது மனைவி மற்றும் எனது அண்ணி ஆகியோர் டாக்ஸி மூலம் பழனியில் இருந்து மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு சென்று எனது அண்ணன் சிகிச்சை பெற்றவரை பார்த்தோம். என்னை வழக்கு சம்பந்தமாக போலிஸ்சார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

நான் சம்பவத்தன்று சம்பவ இடத்திலேயே இல்லை. காரைக்குடியில் இருந்து சம்பத்தன்று அதி காலையிலே பழனிக்கு சென்று விட்டோம். ஆகவே சம்பவம் எப்படி எப்போது நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவத்தை பற்றி என் அண்ணிக்கு போன் மூலமாக கேள்விப்பட்டு அவர் எனக்கு கூறினார். சம்பவத்தில் எத்தனை பேர் ஈடுபட்டார்கள் என்று எனக்கு தெரியாது. அதை பற்றி கேள்விபடவும் இல்லை. சம்பவத்திற்கு மறுநாள் மாலையில் காரைக்குடியில் உள்ள எனது வீட்டில் வைத்து போலிஸ்சார் விசாரித்தார்கள். அ.சா.1 எனக்கு உடன் பிறந்த அண்ணன் என்பதால் அவருக்கு சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
---
IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C. “ | : | 188/2022 |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W.8 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | இராமையா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.08.2024

**முதல் விசாரணை:**

நான் தற்போது காரைக்குடியில் குறிச்சிகண்மாயில் எண்.42/1 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். வழக்கின் சாட்சி இராமநாதன் என்பவரை எனக்கு தெரியும். அவருக்கு சொந்தமான வீட்டில் நான் ஏற்கனவே வாடகைக்கு வசித்து வந்ததன் அடிப்படையில் எனக்கு அவரை தெரியும். ஆஜர் எதிகளாகிய இராஜசேகர் மற்றும் லதா என்வரும் நான் வாடகைக்கு இருந்த லைன் வீட்டில் அவர்களும் வசித்து வந்தார்கள். ஆஜர் எதிரி 1 வது எதிரி இராஜசேகருக்கும் அ.சா.1 இராமநாதன் என்பவருக்கும ் சொத்து சம்பந்தமான பிரச்சனை இருப்பதாக பேசிக்கொண்டார்கள். கடந்த 13.03.2016 ம் தேதி நான் விவசாயம் சம்பந்தமாக வெளியூர் சென்று இருந்தேன். அப்போது ராஜசேகர் என்பவர் அ.சா.1 இராமநாதன் என்பவரை வெட்டி விட்டதாக எனக்கு தகவல் தெரிந்தது. பிறகு மறுநாள் நான் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு சென்று அ.சா.1 இராமநாதனை பார்த்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலிஸ்சார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

சம்பவத்தன்று சம்பவ இடத்தில் நான் இல்லை. சம்பவம் நடந்த இடத்தில் உள்ள் வீட்டில் நான் வாடகைக்கு இல்லை. அ.சா.1 சொந்தமான கண்டனுார் ரோடடில் உள்ள வீட்டில் தான் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். நான் சம்பவத்தை பற்றி செவி வழிச்செய்தியாக தெரிந்து கொண்டேன். அதை நான் அ.சா.1 எதிரிகள் தான் தாக்கியதாக உறுதியாக கூறமுடியாது. அ.சா.1 எனது வீட்டின் உரிமையாளர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு எத்தனை நாள் கழித்து போலிஸ்சார் என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் குடியிருந்த வீட்டின் அருகே வந்து தான் போலீஸசார் விசாரித்தார்கள். சம்பவத்தை பற்றி எந்த ஒரு செவிவழிச்செய்தியும் கேள்விப்பட வில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.
(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.